







## கடைசிவரை கோழையாக – அடிமையாக இருந்தால் வரலாற்றில் களங்கமாக நினைவுகூரப்படுவீர்!

# ஒரு முறையாவது தமிழ்நாட்டுக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுங்கள் பழனிசாமி!



## சேலம் – தேர்தல் பிரச்சார மாபெரும் பொதுக்கூட்டத்தில்

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுரை!

**சேலம், ஏப். 17 –**

**‘வாழ்க்கையில் ஒரு முறையாவது தமிழ்நாட்டுக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுங்கள் பழனிசாமி! கடைசி வரை கோழையாக, அடிமையாக இருந்தால், தமிழ்நாட்டின் களங்கமாகத்தான் வரலாற்றில் நினைவுகூரப் படுவீர்கள்’ எனவும் “ரெஸ்ட்’ இல்லாமல் உழைக்கும் நம்முடைய பெண்களுக்கு இந்த அரசு தரும் ‘ரெஸ்பெக்ட்’ தான் உரிமைத்தொகை’ என்றும் சேலம் பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றுகையில் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்!**

**கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.04.2026) சேலத்தில் நடைபெற்ற சட்டமன்றத்தேர்தல் பரப்புரைப் பொதுக்கூட்டத்தில் ஆற்றிய உரை வருமாறு:**

சேலம் மலைகளின் மாவட்டம் என்று சொல்வார்கள். இங்கே பார்த்தால், மலைகளை மிஞ்சும் அளவுக்கு முழுக்க முழுக்க மகளிர் படை சூழ்ந்திருக்கிறது. மகளிர் ஒவ்வொருவரும் ஃபயராக இருக்கிறீர்கள்! சேலம் என்றால் ஸ்டீல்தான்! அதே போன்று, ஸ்டாலின் என்ற பெயருக்கு அர்த்தமும் ஸ்டீல்தான்! ஸ்டீல் சிட்டிக்கு ஸ்டாலின் வந்திருக்கிறேன்!

தமிழ்நாட்டின் நெற்களஞ்சியத்திற்கு தண்ணீர் வழங்கும் மேட்டூர் அணை!

### சேலத்தின் பெருமை!

ஆங்கிலேயர்களுக்குச் சிம்ம சொப்பனமாக இருந்த தீரன் சின்னமலை தூக்கிலிடப்பட்டுத் தியாக பூமியான, சங்ககிரி கோட்டை அமைந்துள்ள மண், இந்த சேலம் மண்!

குளு குளு காற்று வீசும் ஏற்காடு அமைந்திருக்கும் மாவட்டம்! ஏற்காடு போன்றே, சேலம் மக்களும் ரொம்ப ‘கூல்’ ஆனவர்கள்!

சேலத்தில் இன்னொரு முக்கியமான இடம் இருக்கிறது. முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களின் நட்புக்கு அடித்தளமிட்ட, மாடர்ன் தியேட்டர்ஸ்!

அந்தக் காலத்திலேயே, தென்னிந்திய சினிமாவின் தலைநகரமாக இருந்தது, இந்த சேலம்! அந்த முக்கியத்துவம் இங்கு உரையாற்றிய என் அன்புச் சகோதரர் கலைஞானி கமல்ஹாசன் அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

### சேலம் மாவட்ட நமது வெற்றி வேட்பாளர்கள்!

அதுமட்டுமல்ல, நம் நினைவை விட்டு நீங்காத சேலத்துச் சிங்கம் அண்ணன் வீரபாண்டியார் அவர்களின் மண், இந்த சேலம் மண்!

சேலம் மாவட்டத்தில் உள்ள அனைத்துத் தொகுதிகளிலும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்கள் வெற்றி பெற உங்கள் ஆதரவைக் கேட்டு வந்திருக்கிறேன். முதலில், உங்கள் அனுமதியோடு நம்முடைய வெற்றி வேட்பாளர்களை இப்போது அறிமுகம் செய்யலாமா!

முதலில், சேலம் வடக்கு சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் மாவட்டச் செயலாளர் - அமைச்சர் ராஜேந்திரன். நான் இளைஞரணியைத் தலைமையேற்று நடத்திய காலத்தில் இருந்து, என்னோடு இருப்பவர். சுற்றுலாத் துறையில் பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்தவர். அவருக்கு நீங்கள் எல்லாம் உதயசூரியன் சின்னத்தில் வாக்கினை வழங்கிட வேண்டும்.

அடுத்து, சேலம் மேற்கு சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் தே.மு.தி.க.வைச் சேர்ந்த ஆர். மோகன்ராஜ் அவர்கள். நினைவில் வாழும் என்னுடைய ஆருயிர் சகோதரர் கேப்டன் விஜயகாந்த் - அன்புச் சகோதரி பிரேமலதா விஜயகாந்த் ஆகியோரின் ஆதரவு பெற்ற வேட்பாளர். தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவராகப் பணியாற்றியவர். அவருக்கு நீங்கள் எல்லாம் முரசு சின்னத்தில் வாக்குகளை அளிக்க வேண்டும்.

அடுத்து, சேலம் தெற்கு சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் எம். லோகநாதன் அவர்கள். சேலம் மாவட்டக் கழகத்தின் நெசவாளர் அணி அமைப்பாளர். தொகுதி மக்களுக்கு நன்றாக அறிமுகமானவர். அவருக்கு, உதயசூரியன் சின்னத்தில் நீங்கள் ஆதரவு தந்திட வேண்டும்.

அடுத்து, கெங்கவல்லி சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் கு. சின்னதுரை. சேலம் கிழக்கு மாவட்டத் துணைச் செயலாளர். தலைவாசல் சட்டமன்ற உறுப்பினராக இருந்த போது, கெங்கவல்லிக்குப் பல்வேறு நலத்திட்டங்களைக் கொண்டு வந்தவர். அவருக்கு நீங்கள் உதயசூரியன் சின்னத்தில் ஆதரவு தந்திட வேண்டும்.

அடுத்து, ஆத்தூர் சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த எஸ்.கே. அர்த்தநாரி. சுதந்திரப் போராட்டத் தியாகி சுப்பிரமணி அவர்களின் அன்புப் பேரன். மாநில இளைஞர் காங்கிரஸ் பொதுச் செயலாளர். அவருக்கு, கை சின்னத்தில் உங்கள் ஆதரவை தந்திட வேண்டும்.

அடுத்து, ஏற்காடு சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் டி.எம். ரேவதி மாதேஸ்வரன். ஆசிரியர். சேலம் கிழக்கு மாவட்ட மகளிர் அணித் துணைச் செயலாளர். அவருக்கு, உதயசூரியன் சின்னத்தில் வாக்கினை வழங்கிட வேண்டும்.

### பாலமலைக்கு தார் சாலை அமைக்கப்பாடுபட்டவர்!

அடுத்து, மேட்டூர் சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் மிதுன் சக்கரவர்த்தி. கொளத்தூர் ஒன்றிய தி.மு.க. செயலாளர். உச்ச நீதிமன்றம் வரை சென்று போராடி, பாலமலைக்குத் தார் சாலை அமைக்க ஆணை பெற்று வந்தவர். அவருக்கு, நீங்கள் எல்லாம் உதயசூரியன் சின்னத்தில் ஆதரவு தந்திட வேண்டும்.

அடுத்து, சங்ககிரி சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் மு. மணிகண்டன். சேலம் மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர். தம்பி மணிகண்டனுக்கு, உதயசூரியன் சின்னத்தில் ஆதரவு தந்திட வேண்டும்.

அடுத்து, வீரபாண்டி சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் டாக்டர் ஏ.கே. தருண் அவர்கள். சேலத்துச் சிங்கம் அண்ணன் வீரபாண்டியார் குடும்பத்தைச் சேர்ந்தவர். என் அருமைத் தோழன் மறைந்த செழியனின் மருமகன். தி.மு.க. ஐ.டி.விங் மாநிலத் துணைச் செயலாளர். அவருக்கு, உதயசூரியன் சின்னத்தில் ஆதரவு தந்திட வேண்டும்.

அடுத்து, எடப்பாடி சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் சி. காசி. கழகத் தொழிலாளர் அணி மாநிலத் துணைச் செயலாளர். ஜலகண்டபுரம் பேரூராட்சியில் மூன்று முறை தலைவராக இருந்தவர். அவருக்கு எடப்பாடி மக்கள் உதயசூரியன் சின்னத்தில் ஆதரவு தந்திட வேண்டும்.

> “சட்டமன்றம், நாடாளுமன்றத்தில் பெண்களுக்கு 33 விழுக்காடு வேண்டும் என்று பல ஆண்டுகாலமாகத் தி.மு.க. போராடி வருகிறது. பா.ஜ.க. நினைத்தால் அதை எப்போதோ கொண்டு வந்திருக்கலாம். நாங்களும் அதைத்தான் கேட்கிறோம். ஆனால், தேவையே இல்லாமல் சென்சஸ், தொகுதி மறுவரையறை என, சம்பந்தம் இல்லாத விஷயங்களோடு அதை முடிச்சுப் போட்டு, அது நிறைவேறக் கூடாது என்று பா.ஜ.க. நினைக்கிறது.”

அடுத்து, ஓமலூர் சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் தே.மு.தி.க.வைச் சார்ந்த ஏ.ஆர். இளங்கோவன். என்னுடைய ஆருயிர் சகோதரர் கேப்டன் விஜயகாந்த் அவர்களின் தீவிர விசுவாசி! தே.மு.தி.க.வில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர். அவருக்கு முரசு சின்னத்தில் வாக்கினை வழங்கிட வேண்டும்.

### 11 வேட்பாளர்களின் வெற்றியை உறுதி செய்வீர்!

இந்த 11 பேரின் வெற்றி உறுதியா? உறுதி (மக்கள்). நன்றி! வேட்பாளர்கள் இப்போது உட்காரலாம்! பெண்களே சொல்லிட்டார்கள். இனி எந்த சக்தியாலும் உங்கள் வெற்றியைத் தடுக்க முடியாது! சீட்டு கன்ஃபார்ம்!

தலைவர் கலைஞர் தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது தான் - சேலம் உருக்காலை, சேலம் ரயில்வே கோட்டம், பெரியார் பல்கலைக்கழகம் உள்ளிட்ட பெரிய சாதனைகள் சேலம் மாவட்டத்திற்கு வந்திருக்கிறது! அந்த வழியில் கடந்த 5 ஆண்டுகளில் நம்முடைய திராவிட மாடல் அரசு, சேலத்திற்காகச் செய்த ஒரு சிலவற்றை மட்டும் மிகவும் சுருக்கமாகச் சொல்கிறேன். நேரம் ஆகிவிட்டது.

### சேலம் மாவட்டத்திற்கு எண்ணற்ற திட்டங்கள்!

129 கோடி மதிப்பீட்டில் ரயில்வே மேம்பாலம்,

வெள்ளி கொலுசு உற்பத்தியாளர்களுக்கான உற்பத்தி மையம்,

கருப்பூரில் மினி டைடல் பூங்கா,

சேலம், மேட்டூர், ஆத்தூரில் அறிவுசார் மையங்கள்,

அம்மாபேட்டையில் அரசு புறநகர் மருத்துவமனை,

எடப்பாடி, மேட்டூரில் புதிய பேருந்து நிலையங்கள்,

கருப்பூர் பல்நோக்கு விளையாட்டு அரங்கம்,

மேட்டூர், எடப்பாடி மற்றும் சங்ககிரியில் மினி ஸ்டேடியம் அமைக்கப்பட்டு வருகிறது.

இன்னும் நிறைய இருக்கிறது. சொல்ல நேரம்தான் இல்லை.

இங்கு இத்தனை பெண்கள் இருக்கிறீர்கள். நீங்கள் அனைவருமே விடியல் பேருந்தில் பயணித்திருப்பீர்கள். ஆட்சிக்கு வந்த முதல் நாள் நான் போட்ட முதல் கையெழுத்தே, இந்தத் திட்டத்திற்குத்தான்! எவ்வளவோ திட்டங்கள் இருந்தாலும், முதல் திட்டமாக இதை ஏன் செலக்ட் பண்ணினேன் தெரியுமா? “திராவிட மாடல் ஆட்சியே மகளிருக்கான ஆட்சியாகத்தான் இருக்கப் போகிறது!” என்ற என்னுடைய மெசேஜ் அனைத்துப் பெண்களுக்கும் போய்ச் சேர வேண்டும் என்று நினைத்தேன்!

நான் போடும் முதல் கையெழுத்திலேயே, “ஸ்டாலின் ஆட்சியில் விடியல் வந்தது” என்ற மெசேஜ், சென்னை சிட்டியில் இருந்து, சின்ன கிராமம் வரை போய்ச் சேர வேண்டும் என்றுதான் அந்த முடிவை எடுத்தேன்! தமிழ்நாட்டுப் பெண்களுக்காக, குடும்பத்தில் ஒருவனாக இருப்பேன் என்று நான் கொடுத்த பவர்ஃபுல் சிக்னல் அது!

### 900 கோடி முறை விடியல் பேருந்துகளில் பெண்கள் பயணம்!

இன்றைக்கு 900 கோடி முறை விடியல் பேருந்துகளில் பெண்கள் பயணித்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்தைப் பற்றிச் சர்வே எடுக்கச் சொன்னேன். அதன் ரிசல்ட் பார்த்து, நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை! மாதம் 800 ரூபாயிலிருந்து 900 ரூபாய் வரை பெண்களுக்கு இதனால் காசு மிச்சமாகிறது என்று அதில் சொல்லியிருந்தார்கள். அது எதிர்பார்த்ததுதான்!

ஆனால், நான் எதிர்பார்க்காத இன்னொன்றும் அந்த சர்வேயில் தெரிய வந்தது. இப்படி மிச்சமாகும் பணத்தில், பெண்கள் தாங்கள் விரும்பிய உணவை, வாங்கிச் சாப்பிடுவதாகச் சொல்லி இருக்கிறார்கள். அதைப் பார்த்து அவ்வளவு மகிழ்ச்சி!

தொடர்ச்சி 8 –ஆம் பக்கம்